தமிழாக்கம்

## சுருக்கம்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ 1) துறை

அரசாணை (நிலை) எண்.18 நாள்: 23.01.2020

விகாரி, தை 09,

திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.225, தொழிலாளர் துறை, நாள் 15.02.1972.
2. அரசாணை (நிலை) எண்.1025, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1976.
3. அரசாணை (நிலை) எண்.1083, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 18.12.1976.
4. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
5. குறிப்பாணை எண்.34107/என்–1/1977–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.05.1978.
6. அரசாணை (நிலை) எண்.998, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.05.1981.
7. அரசாணை (நிலை) எண்.1505 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 14.07.1981.
8. அரசாணை (நிலை) எண்.8, வேலைவாய்ப்பு பணிகள் துறை, நாள் 07.01.1987.
9. அரசாணை (நிலை) எண்.29, வேலைவாய்ப்பு பணிகள் துறை, நாள் 07.05.1988.
10. அரசாணை (நிலை) எண்.2899, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.12.1988.
11. அரசாணை (நிலை) எண்.719, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19.04.1989.
12. அரசாணை (நிலை) எண்.1499, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1989.
13. அரசாணை (நிலை) எண்.40, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 05.01.1990.
14. அரசாணை (நிலை) எண்.554, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 09.04.1990.

15. அரசாணை (நிலை) எண்.1044, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.11.1990.
16. அரசு கடிதம் எண்.43007A/க்யூ/90–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.03.1991.
17. அரசு கடிதம் எண்.2286/க்யூ.1/1990–2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 17.06.1991.
18. அரசு கடிதம் (நிலை) எண்.282, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 09.10.1991.
19. அரசாணை (நிலை) எண்.23, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10.02.1993.
20. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16.07.1993.
21. அரசு கடிதம் எண்.2941/ க்யூ.1/1994–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 01.03.1994.
22. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
23. அரசாணை (நிலை) எண்.9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 19.01.1998
24. அரசாணை (நிலை) எண்.70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 02.07.1998.
25. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ) துறை, நாள் 17.07.1998.
26. அரசாணை (நிலை) எண்.134, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 22.10.1998.
27. அரசாணை (நிலை) எண்.143, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 11.11.1998.
28. அரசாணை (நிலை) எண்.198, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 10.11.1999.
29. அரசாணை (நிலை) எண்.118, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 24.07.2000.
30. அரசாணை (நிலை) எண்.168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 19.10.2000.
31. அரசு கடிதம் (நிலை) எண்.34, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 16.04.2002.
32. அரசாணை (நிலை) எண்.17 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 07.02.2003.
33. அரசு கடிதம் (நிலை) எண்.54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ) துறை, நாள் 23.05.2006.

34. அரசாணை (நிலை) எண்.61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 19.07.2006.

35. அரசு கடிதம் (நிலை) எண்.126/க்யூ–1/2006, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16.09.2006.

36. அரசாணை (நிலை) எண்.135, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.2) துறை, நாள் 04.10.2006.

37. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 12.03.2007.

38. அரசு கடிதம் (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007.

39. அரசாணை (நிலை) எண்.216, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 15.11.2007.

40. அரசு கடிதம் (நிலை) எண்.3/க்யூ1/2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.01.2010.

41. அரசு கடிதம் (நிலை) எண்.4/க்யூ1/2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11.01.2010.

42. அரசு கடிதம் (நிலை) எண்.86/க்யூ1/2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.05.2010.

43. அரசாணை (நிலை) எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.2) துறை, நாள் 30.08.2010.

44. அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 10.12.2014.

45. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1) துறை, நாள் 02.03.2016.

46. அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.04.2017.

47. நீதிப்பேராணை (MD) எண்.6325/2014, நாள் 29.08.2018, நீதிப்பேராணை (MD) எண்கள்.4129, 7045, 16624, 20786/2014 மற்றும் நீதிப்பேராணை (MD) எண்கள்.19455, 19530/2018, நாள் 24.09.2018-ல் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையால் வழங்கப்பட்ட பொது ஆணை.

48. நீதிப்பேராணை எண்.26872/2018 மற்றும் நீதிப்பேராணை பல்வகை மனு எண்.31213/2018, நாள் 09.04.2019–ல் சென்னை உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட ஆணை.

49. நீதிப்பேராணை எண்.31399/2014 மற்றும் 25806/2014, நாள் 16.04.2019, நீதிப் பேராணை (MD) எண்.20900/2015, நாள் 19.06.2019-ல் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையால் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவு.

______

ஆணை:-

1972 ஆம் ஆண்டில் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திட்டமானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

- பணியிலிருக்கும் போது தங்களின் குடும்பத்தை ஏழ்மையான சூழ்நிலைகளில் விட்டு இறந்த அரசுப் பணியாளர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு, வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக பணியமர்த்தம் செய்யப்படும் வழக்கமான நடைமுறைகளைத் தளர்த்தி வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும்;

- இது, இறந்து போன அரசுப் பணியாளர்கள் அரசிற்காக மேற்கொண்ட பணிகளைப் பாராட்டி அவர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு உதவும் வகையில் அரசால் செயல்படுத்தப்படும் ஒரு நலத் திட்டமாகும்.

- கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டுவதை ஒரு உரிமையாகக் கோர இயலாது. இது பணியிலிருக்கும் போது இறந்த அரசுப் பணியாளர்களின் மறைவுக்குப் பின்னர் இடர்பாடுகளுக்கு உள்ளாகும் வறிய நிலையிலுள்ள வாரிசுதாரர்களுக்கு உதவுவதற்காக அரசால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

2. இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து பல்வேறு வழிமுறைகள் / அறிவுறுத்தல்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த ஆணைகள், விண்ணப்பதாரரின் வயது, விண்ணப்பிப்பதற்கான கால அளவு, விண்ணப்பதாரரின் கல்வி மற்றும் பிற தகுதிகள், விண்ணப்பிப்பதற்குத் தகுதியான நபர்கள், பல்வேறு பணி நியமன அதிகாரிகள் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் போன்ற பல காரணிகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்ததாகும்.

3. மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை, 19.06.2019 ஆம் நாளிட்ட அதன் நீதிப் பேராணை விண்ணப்ப (MD) எண்.20900/2015 இல் பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது:-

"அரசு தலைமைச் செயலாளர், கருணை அடிப்படையிலான பணி நியமனத் திட்டம் முழுவதையும் கருதிப் பார்த்து, சூழ்நிலையை ஆராய்ந்து, வழிகாட்டும் நெறிமுறைகள் / நிபந்தனைகளை உருவாக்கி அதன் பின்னர் மேற்கூறியவற்றை கண்டிப்பாக அனைத்துத் துறைகளும் பின்பற்றுவதற்கேற்ப, அத்தகைய தகுதியுடைய குடும்பங்களுக்கு மட்டுமே பணிநியமனத்தை வழங்குவதையும், அத்தகைய சிறப்பு திட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படாததையும் அல்லது

அரசு ஊழியரின் குடும்பத்தில் ஒருவருக்கு ஒரு முறை மட்டுமே பணிநியமனம் அளிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மறுஆய்வு செய்யப்பட வேண்டும் அல்லது கருதிப்பார்க்கப்பட வேண்டும். அரசியல் அமைப்பின் விதி முறைகளை மீறாத வகையில் ஒரே சீரான முறையில் செயல்படுத்தப்படுவதற்கும், தொடர்ந்து நிருவகிக்கப்படுவதற்கும் ஏதுவாக அனைத்துத் துறைகளுக்கும் பொருத்தமான வழிகாட்டி நெறிமுறைகள் / நிபந்தனைகள் வழங்கப்பட வேண்டும்."

4. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் **09.04.2019** ஆம் நாளிட்ட நீதிப்பேராணை விண்ணப்ப எண்கள்.**26872/2018** நீதிபேராணை பல்வகை மனு எண்.**31213/2018**, மற்றும் **16.04.2019** ஆம் நாளிட்ட நீதிப்பேரணை விண்ணப்ப எண்கள்.**31399, 25806/2014** ஆகியவற்றில் வெளியிடப்பட்ட ஆணைகளில் இதைப் போன்ற உத்தரவுகள் கருணை அடிப்படையிலான பணி நியமணம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ளன. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் மேற்சொன்ன ஆணைகளின் அடிப்படையில், கருணை அடிப்படையிலான பணி நியமனத்தின் முழு விவகாரம் குறித்த அனைத்துப் பிரச்சினைகளையும் அரசு ஆய்வு செய்து மேலே பார்வையில் படிக்கப்பட்ட **1** முதல் **46** வரையிலான முந்தைய அனைத்து ஆணைகளையும் இரத்து செய்து பின்வரும் விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுகிறது.

**<u>கருணை அடிப்டையிலான பணி நியனமனத்தின் கீழ் கருதிப்பார்க்கப்பட வேண்டிய தகுதியுடைய நபர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள்</u>**

(i) பணியிலிருக்கும் போது மரணமடைந்த அரசுப் பணியாளர்கள்.

(ii) மருத்துவ அடிப்படையில், உடல் தகுதியின்மையின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர்கள் (**53** வயதிற்குள்)

(iii) பணியில் இருக்கும் போது கொல்லப்பட்ட / உடல் இயலாமையுற்ற பாதுகாப்புப் படையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பணியிலிருக்கும் போது இறந்தவர்கள்.

(iv) **1872** ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் (Indian evidence Act) **107** மற்றும் **108** ஆம் பிரிவின் கீழ், காணாமல் போன அரசு ஊழியர் இறந்துவிட்டார் என்று உரிய நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டால், காணாமல் போன அரசு ஊழியர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கு பணிநியமனம் வழங்குவது குறித்து கருத்தில் கொள்ளலாம்.

(v) தற்காலிக பணி நீக்கத்தில் இருக்கும் போது பணி மூப்பு வயதினை அடையாமல் இறந்த அரசுப் பணியாளர்கள்.

(vi) இனக்கலவரத்தில் கொல்லப்பட்ட பட்டியலின வகுப்பினைச் சேர்ந்த நபர்களைச் சார்ந்தோர்.

**<u>கருணை அடிப்படையிலான பணிநியமனத்தின் கீழ் கருதிப்பார்க்கத் தகுதி பெறாத நபர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள்</u>**

(i) அடிப்படை விதிகளின் 56 (1) (c) இன் கீழ் பணி மூப்பு வயதினை அடைந்த பின்னும் பணியிலிருக்கும் நபர்கள்

(ii) தற்காலிகப் பணி நியமனத்தில் தொகுப்பூதியம், தினக்கூலி அடிப்படையிலான நியமனங்கள் போன்றவற்றின் கீழ் பணிபுரியும் நபர்கள் மற்றும் பணி வரன்முறை செய்யப்படாமல் பணிபுரிபவர்கள்

(iii) முறையான காலமுறை ஊதியத்தின் கீழ் வராத நபர்கள்.

**<u>கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்காக தகுதிபெற்ற இறந்த அரசு ஊழியர் / நபரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள்/ நெருங்கிய உறவினர்கள்</u>**

(i) இறந்த அரசுப் பணியாளரின் மகன் / திருமணமாகாத மகள் / மனைவி / கணவர் / சட்டப்பூர்வமான தத்தெடுக்கப்பட்ட மகன் / சட்டப்பூர்வமாக தத்தெடுக்கப்பட்ட திருமணமாகாத மகள் / கைம்பெண் நிலையிலுள்ள மகள் / விவாகரத்துப் பெற்ற மகள் / கணவனால் கைவிடப்பட்ட மகள்

(ii) திருமணமாகாமல் இறந்த அரசுப் பணியாளர்களின் தந்தை / தாய் மற்றும் திருமணமாகாத சகோதரர்கள் மற்றும் திருமணமாகாத சகோதரிகள்

(iii) இறந்த அரசுப் பணியாளரின் ஏனைய வகையில் தகுதியுடைய திருமணமான மகள்

(iv) இறந்து போன அரசுப் பணியாளரின் குடும்பத்தில், ஏதேனும் ஒரு நபர் அரசுப் பணியாளர் இறப்பதற்கு முன்பே வேலை வாய்ப்புப் பெற்று, ஆனால் தனியாக வசித்துக் கொண்டு குடும்பத்திற்கு யாதொரு உதவியும் அளிக்காமல் இருந்தால், மற்றொரு தகுதியான சார்ந்திருப்பவரை கருத்தில் கொள்ளலாம்

(v) இறந்த அரசுப்பணியாளர் சார்ந்த, ஏதேனும் ஒரு நபர் / நபர்கள் இராணுவப் படைத் துறைப் பணியிலிருந்தால் ஏனைய சார்ந்திருப்பவர்களிலிருந்து ஒருவர், கருணை அடிப்படையின்கீழ் பணிநியமனம் பெறத் தகுதியுடையவராவார்.

(vi) இறந்து போன அரசுப் பணியாளரின் குடும்பத்தில் உள்ள ஏதேனும் ஒரு நபர் தற்காலிகமான / பகுதி நேர அடிப்படையில் அதாவது சத்துணவு அமைப்பாளர் மற்றும் உதவியாளராகப் பணிபுரிபவர்கள் மற்றும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்தால் குடும்பத்திலுள்ள ஏனைய சார்ந்திருப்பவர்களுக்கு பணி நியமனம் வழங்கக் கருதலாம்.

<u>நியமனம்</u>

இறந்து போன அரசுப் பணியாளரின் மனைவி / கணவர் அல்லது இறந்து போன அரசுப் பணியாளரின் கணவன் / மனைவியால் தகுதிக்கேற்ப பரிந்துரைக்கப்படும் நபருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட வேண்டும்.

**<u>விண்ணப்பம் அளிப்பதற்கான கால அளவு</u>**

அரசு ஊழியர் இறந்த தேதியிலிருந்து மூன்றாண்டிற்குள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான விண்ணப்பம் அளிக்கப்பட வேண்டும்.

**<u>கருணை அடிப்படையிலான பணி நியமனத்தின் கீழ் விண்ணப்பிக்கத் தகுதியுடைய நபர்களின் வயது வரம்பு</u>**

(i) கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்காக விண்ணப்பம் அளிக்கும் நேரத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச வயது 18.

(ii) அரசு ஊழியர் இறந்த நாளில், வாழ்க்கைத் துணை / தந்தை / தாய்க்கு இருக்க வேண்டிய அதிகபட்ச வயது 50.

(iii) இறந்து போன அரசு ஊழியரின் மகன் அல்லது மகள் மற்றும் திருமணமாகாமல் இறந்த அரசு ஊழியரின் திருமணமாகாத சகோதரர் / திருமணமாகாத சகோதரிக்கு விண்ணப்பிக்கும் போது இருக்க வேண்டிய அதிகபட்ச வயது 40.

**<u>கருணை அடிப்படையிலான பணி நியமனத்தின் கீழ் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள்</u>**

“C மற்றும் D தொகுதிகளில்” உள்ள பணியிடங்கள் மட்டுமே கருணை அடிப்படையிலான பணி நியமனத்தினால் நிரப்பப்பட வேண்டும்.

**<u>கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான தகுதி அடைய, குடும்பமானது வறுமையான சூழ்நிலையில் இருக்க வேண்டும்</u>**

(i) இறந்து போன அரசு ஊழியர் குடும்பத்தின் நிதி நிலைமையை பணிநியமனம் செய்யும் அதிகாரிகள் ஆய்வு செய்து, அவர்கள் வேலைவாய்ப்பில்லாமல் பொருளாதார சூழலை எதிர்கொள்ள இயலாது என்று திருப்தியடைந்த பின்னரே, அந்தக் குடும்பத்தில் உள்ள தகுதியான நபருக்கு வேலையை அளிக்க வேண்டும். ஆனால், வேலைவாய்ப்பிறகாக அக்குடும்பம் இடர்பாடுகளை சந்திக்கக்கூடாது.

(ii) ஆண்டு வருமானம் 2 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக உள்ள குடும்பத்தினர் மட்டுமே ஏழ்மையான சூழ்நிலைகளில் உள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

(iii) இறந்த ஊழியரின் குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஊழியர் வசிக்கும் வீடு போன்ற அசையாச் சொத்துக்கள் போன்றவற்றை குடும்ப வருமானத்தை மதிப்பிடும் போது கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இருப்பினும், அரசு ஊழியரின் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் உள்ள அசையும் / அசையாச் சொத்துக்களிலிருந்து வருமானம் பெறப்படுமாயின், அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்பகுதி வரம்பிற்குட்பட்ட வட்டாட்சியாரால் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

(iv) வேறு மாநிலத்தை சேர்ந்த ஆனால் தமிழ்நாடு அரசுப் பணியில் பணிபுரிந்து இறந்த அரசு ஊழியர் தொடர்பான நேர்வில், தமிழ்நாட்டில் அவர் வசிக்கும் பகுதியில் உள்ள வட்டாட்சியரிடமிருந்தும், அவரது பூர்வீக மாநிலத்திலுள்ள வருவாய் கோட்டாட்சியர் அல்லது துணை ஆட்சியாளரிடமிருந்தும் தேவையான சான்றிதழ்ப் பெறப்பட வேண்டும்.

(v) **கருணை அடிப்படையின் கீழ் பணி நியமனம் பின்வரும் நேர்வுகளில் கருதப்படமாட்டாது:-**

(a) இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஏதேனும் ஒரு நபர் அரசு / தனியார் நிறுவனங்களில் முறையான பணியில் இருந்தால்.

(b) பணி நியமனத்திற்காக விண்ணப்பித்த இறந்த அரசு ஊழியரின் மனைவி மறுமணம் புரிந்திருந்தால்.

<u>மாற்று விண்ணப்பம்</u>

கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்காக விண்ணப்பித்த நபர் விண்ணப்பித்த பின்னர், (இறந்த அரசுப் பணியாளரின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்) இறந்து விட்டால், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கென வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இறந்த அரசு ஊழியரின் மற்றொரு சட்டப்பூர்வமான வாரிசுதாரரின் மாற்று விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

<u>இட ஒதுக்கீடு</u>

கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு, இட ஒதுக்கீடு விதி பொருந்தாது.

<u>உறுதி மொழி</u>

(i) இறந்து போன அரசு ஊழியரின் மகன் அல்லது மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்கப்பட்டால், நேர்விற்கேற்ப, அவர்களிடமிருந்து தங்களது தாய் / தந்தைக்கு ஆதரவு அளிப்போம் என்று உறுதிமொழி பெறப்பட வேண்டும்.

(ii) திருமணமான மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்கப்பட்டால், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்படும் என்ற உறுதிமொழி பெறப்பட வேண்டும்.

<u>விண்ணப்பங்களை பரிசிலிப்பதற்கான நடைமுறை</u>

(i) இறந்த அரசுப் பணியாளரைச் சார்ந்தவர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கு அரசு ஊழியர் இறந்த போது பணிபுரிந்த அலுவலகத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) பின்னர் அந்த அலுவலகத்தின் தலைவர், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அப்பணியாளர் இறந்த நாள், குடும்பத்தின் வறுமை நிலை, கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரரின் கல்வி குறித்த தகுதி போன்றவற்றின் உண்மைத்தன்மையை சரிபார்க்க வேண்டும்.

(iii) அவ்வாறு, சரிபார்த்தபின், அலுவலகத்தின் தலைவர், விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரருக்கு

வேலைவாய்ப்பினை வழங்குவதற்கேற்ற வகையில் அவரது அலுவலகத்தில் ஏதேனும் காலிப் பணியிடம் இருக்கிறதா என்பதைச் சுட்டிக் காட்டி அவரது அறிக்கையை துறைத் தலைவருக்கு அளிக்க வேண்டும்.

(iv) கருணை அடிப்படையின் கீழ் பணி நியமனங்களை மேற்கொள்வதற்கான பணி மூப்பினை நிர்ணயிப்பதற்கு அரசு ஊழியர் இறந்த நாள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(v) வேண்டுகோளைப் பரிசீலித்த பின்னர், இறந்த அரசு ஊழியர் அவர் மரணமடைந்த நேரத்தில் பணிபுரிந்த அலுவலகத்தில் அல்லது துறையில் ஏதேனும் காலிப் பணியிடம் இருப்பின், விண்ணப்பதாரர் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்வாராயின், அலுவலகத் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பணி நியமனத்திற்கான ஆணைகளை துறைத் தலைவர் அளிக்க வேண்டும்.

(vi) ஏதேனும் தளர்வு தேவைப்படுமாயின், ஆணைகளுக்காக, அரசின் நிருவாகத் துறைக்கு தேவையான செயற்குறிப்புகளை 15 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

(vii) துறைத்தலைவர் அவரது எந்த ஒரு அலுவலகத்திலும் யாதொரு காலிப்பணியிடமும் இல்லை அல்லது பின்வரும் காலத்தில் காலிப் பணியிடம் எழுவதற்கான சாத்தியமில்லை என்று அறிந்தால், இறந்த அரசுப் பணியாளர் இறுதியாகப் பணிபுரிந்த மாவட்டத்தின் ஆட்சியாளருக்கு விண்ணப்பதாரரின் பெயரையும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்.

(viii) ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஆட்சியாளர், இந்த செயல் நோக்கத்திற்காக, அத்தகைய சார்ந்திருப்பவர்களின் பெயர் மற்றும் ஏனைய விவரங்களைப் பதிவு செய்வதற்கென சிறப்புப் பதிவேட்டை பராமரிக்க வேண்டும்.

(ix) அலுவலக உதவியாளர் / பதிவுரு எழுத்தர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் போன்ற வகைப்பாடுகளில் துறைத் தலைவர் மேற்சொன்ன உத்தரவுகளில் குறிப்பிடப்பட்ட இடங்களில், துறைத் தலைமையகம் உள்ளிட்ட ஏதேனுமொரு துறையில், காலிப்பணியிடம் ஏற்படுமாயின், எங்கு காலிப்பணியிடம் ஏற்பட்டுள்ளது மற்றும் அந்தப் பணியிடத்திற்காக கருதிப்பார்க்க வேண்டிய யாதொரு இறந்த அரசுப் பணியாளரைச் சார்ந்திருப்பவர் குறித்து துறைத் தலைவர் முதலில் மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(x) துறைத்தலைவரிடமிருந்து அவ்வாறு கோரப்பட்ட விவரங்கள் பெறப்பட்டதும், பணி மூப்பின்படியும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், அந்தத் துறையில் பணிநியமனத்திற்காக கருதிப்பார்ப்பதற்காக, மாவட்ட ஆட்சியாளர் சிறப்புப் பதிவேட்டிலிருந்து சார்ந்திருப்பவர்களின் பெயர் அல்லது பெயர்கள் மற்றும் விவரங்களை அனுப்ப வேண்டும்.

(xi) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு, அத்தகைய காலிப்பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடும் முன்னர், ஒவ்வொரு துறைத் தலைவரும் ஆட்சியாளருக்கு முதலில் அதனை தெரிவிக்க வேண்டும். மேற்சொன்ன (X) இல் உள்ள உத்தரவுகள் /

அறிவுரைகளின்படி, அவர்களால் பராமரிக்கப்படும் சிறப்புப் பதிவேட்டில் விண்ணப்பதாரர்கள் எவரும் இல்லையென்று சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் / வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

(xii) மாவட்ட ஆட்சியாளர், இறந்த அரசுப் பணியாளர்களைச் சார்ந்திருப்பவர்களுக்காக பராமரிக்கப்படும் "சிறப்புப் பதிவேட்டின் நிலையை அறிந்து கொள்வதற்காக, காலாண்டு அறிக்கையை அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு அனுப்ப வேண்டும். காலாண்டு அறிக்கைகள் மாதத்தின் 15–ம் நாளிற்குள் அனுப்பப்பட வேண்டும்.

(xiii) மாவட்ட ஆட்சியாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பணி நியமன அதிகாரிகள், இறந்த அரசுப் பணியாளர்களைச் சார்ந்திருப்பவர்களின் தகுதிக்கான தேவைக்கேற்ப, கருணை அடிப்படையிலான பணிநியமனத்தை வழங்குவதற்கான காலிப் பணியிடம் ஏதும் அவர்கள் துறையில் இல்லையெனில், மேற்சொன்ன உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டும்.

(xiv) கருணை அடிப்படையிலான பணி நியமனம் உண்மையான காலிப்பணியிடங்களுக்கு மட்டுமே செய்யப்பட வேண்டும். மிகையான பணியிடங்கள் உருவாக்கப்படக் கூடாது.

<u>பணிவரன்முறை</u>

(i) கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களின் பணியினை விதிகளின்படி, ஒரு ஆண்டிற்குள் பணிவரன்முறை செய்ய அனைத்துத் துறைத் தலைவர்கள் / ஆட்சியாளர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(ii) கருணை அடிப்படையின் கீழ் 01.02.2016 ஆம் நாளுக்கு முன் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள், தளர்வு இருந்தாலும் / இல்லாவிட்டாலும் அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 02.03.2016–ன்படி பணி வரன்முறை செய்யப்படுவர்.

(iii) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையின் கீழ் பணிநியமனம் செய்யப்பட்ட நபரின் பணியை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து இசைவினைப் பெறும் நடைமுறை விட்டொழிக்கப்பட்டுள்ளது.

<u>பொதுவானவை</u>

(i) பணிநியமனத்தை வழங்குவதற்கு முன் இறந்த அரசுப் பணியாளர் குடும்பத்தின் ஏழ்மையான சூழ்நிலைகள் குறித்து திருப்தியடைந்த பின்னரே பணி நியமனம் வழங்க வேண்டியது பணி நியமனம் செய்யும் அதிகாரிகளின் பொறுப்பாகும்.

(ii) இந்தத் திட்டத்தின் கீழ், வேலைவாய்ப்பினைக் கோரும் நபர்கள் அந்தத் தொடர்புடைய பணியிடங்களுக்காக வரையறுக்கப்பட்ட அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

(iii) இறந்த அரசுப் பணியாளரின் குடும்பத்திலிருந்து ஒரு சார்ந்திருப்பவருக்கு மேல், இந்தத் திட்டத்தின்கீழ் சலுகை வழங்கப்பட மாட்டாது.

(iv) கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், வரையறுக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் இறுதியில் உறுதி மொழி ஆவணங்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். அந்த விண்ணப்பப் படிவம், பணி நியமன அதிகாரி / அலுவலகத் தலைவரால் மேலொப்பமிடப்பட வேண்டும்.

(v) தலைமைச் செயலகத் துறைகளிலுள்ள உதவியாளர் பணியிடங்களுக்கு பல்வேறு தலைமை செயலக துறைகளிலிருந்து கருணை அடிப்படையிலான நியமத்திற்கு பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்புடைய துறைகளால் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட பின்னர் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையால் கருணை அடிப்படையிலான பணிகள் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(vi) தலைமைச் செயலகத் துறைகளிலுள்ள அலுவலக உதவியாளர்கள் மற்றும் பதிவுரு எழுத்தர்கள் பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்கள் தொடர்புடைய துறைகளால் நிரப்பப்பட வேண்டும். நியமனம் அதிகாரிகள், நடப்பிலுள்ள வழிகாட்டும் நெறிமுறைகளை பின்பற்றிய பின்னர், ஆணைகள் வெளியிடத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

(vii) இறந்த அரசுப் பணியாளரைச் சார்ந்திருப்பவர் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதி பெறாத கைம்பெண்ணாக இருப்பின், துப்புரவாளர் போன்ற பணியில் அவர்கள் நியமிக்கப்படலாம்.

5. தலைமைச் செயலகத் துறைகள், மாவட்ட ஆட்சியாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் ஏனைய அனைத்து பணி வழங்கும் அதிகாரிகள் போன்றோர் கருணை அடிப்படையிலான பணி நியமனம் / பணி வரன்முறைகளை வழங்குவதற்காக இத்தகைய உத்தரவுகளைப் பின்பற்ற வேண்டுமென்று அரசு அவர்களை அறிவுறுத்துகிறது.

6. தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைவர்கள் மற்றும் பணி நியமன அதிகாரிகள் விழிப்போடு இந்த உத்தரவுகளை தவறாமல் பின்பற்றுவதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–600 009.

அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் நிர்வாகத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009. (அசாதாரண சூழ்நிலைகளை நிர்ணயிப்பதற்கான வருடாந்திர வருமானத்தின் உச்சவரம்பைக் குறிக்கும் வகையில் தேவையான வழிமுறைகளை வழங்குவதற்காக).

அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009.

அனைத்து துறை தலைவர்கள்.
அட்வகேட் ஜெனரல், சென்னை / ரிஜிஸ்ட்ரார் ஜெனரல், மதுரை/ அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட நீதிபதிகள் / மாவட்ட மாஜிஸ்ட்ரேட்ஸ் (நீதிமன்றம்).
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–600 104.
அரசு வழக்குரைஞர், சென்னை–600 104.
பொதுக் கணக்காயர், சென்னை–600 018.
ஆணையர், கருவூலகங்கள் மற்றும் கணக்கு, சென்னை–600 035.
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, கிண்டி, சென்னை–600 032.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 003.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள் (வடக்கு, தெற்கு, கிழக்கு, தலைமைச் செயலகம்), சென்னை.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.

நகல்
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/12/20

பிரிவு அலுவலர்

5/12/2020